கனம் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்.

முன்னிலை : திரு. E.மணிகண்டன், B.A., B.L.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

2025ம் வருடம் ஏப்ரல் மாதம் 22ம் தேதி செவ்வாய்கிழமை
இடைநிலை மனு எண்.3/2025
இன்
அசல் வழக்கு எண்.243/2019
* * * *

| | | |
|---|---|---|
| நாகராஜன் | ... | மனுதாரர்/1ம் பிரதிவாதி |

/எதிர்/

| | | |
|---|---|---|
| 1. ஜோதி | ... | 1ம் எதிர்மனுதாரர்/வாதி |
| 2. தமிழ்நாடு மின்சார வாரியம் பகிர்மான ஊரகம் அதன் உதவி பொறியாளர் மூலம் | ... | 2ம் எதிர்மனுதாரர்/2ம் பிரதிவாதி |

இம்மனுவானது 09.04.2025ல் இந்நீதிமன்றத்தில் இறுதி விசாரணைக்காக வந்த போது மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் திரு.M.விவேக்குமார் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் கற்றிந்த வழக்கறிஞர் திருமதி.A.லாவண்யா அவர்கள் ஆஜராகியும், 2ம் எதிர்மனுதாரர்/2ம்

பிரதிவாதி அசல் வழக்கில் ஒருதலைபட்சமாக்கப்பட்டும் இருந்து வந்த மனுவில், இருதரப்பு வாதுரைக்கு போதிய வாய்ப்பளித்தும், மனு மற்றும் வழக்காவணங்களை பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் இன்று திறந்த நீதிமன்றத்தில் பிறப்பிக்கும்...

## உத்தரவு

இம்மனுவானது அசல் வழக்கான O.S.No.243/2019–ஐ நிராகரிக்க வேண்டி மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் சட்டப்பிரிவு 151ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா என்பதேயாகும்.**

1.1) மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பு மனு, 1ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பு எதிருரை மற்றும் வழக்கு ஆவணங்கள் யாவும் பரிசீலனை செய்யப்பட்டது. இருதரப்பிலும் அவர்கள் தரப்பு மனுவினை நிரூபணம் செய்வதற்கு எந்தவிதமான சாட்சி, சான்றாவணங்களை முன்னிலைப்படுத்தவில்லை.

1.2) 1ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்த எதிருரையில், மனுதாரர்/1ம் பிரதிவாதியின் மனுவினை ஆட்சேபித்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) தீர்வு :–**

2.1) அசல் வழக்கானது வாதி தரப்பில் வா.சா.1 மற்றும் வா.சா.2 விசாரணை செய்யப்பட்டு வா.சா.2 சாட்சியின் குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. அசல் வழக்கின் பரிகாரமானது 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள மின் இணைப்பை 2ம் பிரதிவாதி அகற்ற வேண்டி செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் பிறப்பிக்கவேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2.2) OS No.31/2017 வழக்கில் மாண்புமிகு திருமங்கலம் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் 29.06.2018ல் பிறப்பித்த ஒருதலைபட்சமான தீர்ப்பாணையை அடிப்படையாக கொண்டு வழக்குச்சொத்தில் உள்ள 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள மின் இணைப்பை இரத்து செய்யவேண்டி அசல் வழக்கு தாக்கல்

செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி OS No.31/2017 வழக்கில் பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்சமான தீர்ப்பாணையானது நீக்கரவு செய்யப்பட்டுள்ளது என்றும், பின்னிட்டு, அசல் வழக்கானது வாதியின் தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே, அசல் வழக்கானது நிலைநிற்கத்தக்கதல்ல என்று மனுதாரர் தரப்பில் அசல் வழக்கை நிராகரிக்கவேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2.3) வழக்குச்சொத்தில் 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள மின் இணைப்பை அகற்ற செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் 2ம் பிரதிவாதி பேரில் பிறப்பிக்கக்கோரும் வாதியின் பரிகாரமானது வாதிக்கு கிடைக்கத்தக்கதா என்று தீர்மானிக்கபடவேண்டியதே அசல் வழக்கில் எழுந்துள்ள எழுவினாவாகும். இந்நிலையில், வாதி தரப்பில் வா.சா.1 மற்றும் வா.சா.2 விசாரணை செய்யப்பட்டு வழக்கு விசாரணை நிலுவையில் இருந்து வரும் நிலையிலும், அசல் வழக்கை நிராகரிக்கவேண்டி மனுதாரர்/1ம் பிரதிவாதி தாக்கல் செய்த மனுவிற்கு ஆதரவாக சாட்சியமோ, சான்றாவணங்களோ மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யாத நிலையிலும்,

அசல் வழக்கானது கட்டளை 7 விதி 11ன் கீழ் நிராகரிக்கப்பட வேண்டியது என்ற மனுதாரரின் வாதமானது மனுதாரர் தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டதாக ஏற்க இயலாது. மேலும்,

**Astral Cables Limited**

**Vs.**

**The National Small Industries Corporation Limited,**

**(A Government of India Enterprise**

**rep. by its Chairman cum Managing Director and another**

**2011 2 LW 332**

...என்ற மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற முன்தீர்ப்பின் பத்தி 10(15)ல்

..."15. Order VII, Rule 11(d) CPC has limited application. It must be shown that the suit is barred under any law. Such a conclusion must be drawn from the averments made in the plaint. Different clauses in Order VII, Rule 11 should not be mixed up. Whereas in a given case, an application for rejection of the plaint may be filed on more than one ground specified in various sub-clauses thereof, a clear finding to that effect must be arrived at. What would be relevant for invoking clause (d) of Order VII, Rule 11 CPC is the averments made in the plaint. For that purpose, there cannot be any

addition or subtraction. Absence of jurisdiction on the part of a court can be invoked at different stages and under different provisions of the Code. Order VII, Rule 11 of the Code is one, Order XIV, Rule 2 is another” என்று கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில், கட்டளை 7 விதி 11ன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சரத்துக்களுக்கு உட்பட்டோ அல்லது அசல் வழக்கானது சட்டப்படியானதாக இல்லை என்றோ மனுதாரர் தரப்பில் நிரூபணம் செய்யும்விதமாக சாட்சி, சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்த வில்லை.

2.5) மேலும், மாண்பமை திருமங்கலம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.31/2017 வழக்கானது தள்ளுபடி செய்யப்பட்டது என்ற காரணத்திற்காக மட்டும் வாதியின் பரிகாரமானது கட்டளை 7 விதி 11ன் கீழ் நிலைக்கத்தக்கதல்ல என்று மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பு வாதமானது சட்டப்படியானது ஆகாது. எனவே, அசல் வழக்கானது இருதரப்பு சாட்சி விசாரணைக்கு பின்னிட்டே 1ம் எதிர்மனுதாரர்/வாதி அசல் வழக்கில் கோரியுள்ள பரிகாரமானது 1ம் எதிர்மனுதாரர்/வாதிக்கு

கிடைக்கத்தக்கதா என்று தீர்வு காண முடியும் என்று இந்நீதிமன்றம் தீர்மானித்தும் மனுதாரர்/1ம் பிரதிவாதியின் மனு நிலைக்கத்தக்கதல்ல என்று தீர்மானித்தும் தீர்வு காணப்படுகிறது.

**முடிவாக,** மனுதாரர்/1ம் பிரதிவாதியின் இம்மனுவானது தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு இந்த திறந்த நீதிமன்ற அவையில் 2025ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.04.22 17:13:22 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

**இணைப்பு:**

**சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் இருதரப்பிலும் தாக்கல்** :–

––இல்லை––

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.04.22 17:13:30 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

இடைநிலை மனு எண்.03/2025
இன்
அசல் வழக்கு எண்.243/2019
வரைவு/செவ்வை உத்தரவு
நாள் : 22.04.2025